**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

**Calendar** : **CC. 08/2017.**

**Miscellaneous** :

**Summary Trial** :

**Maintenance** :

**Deposition of witness for prosecution** : **PW.1 மகாராஜன்**
**Fathers Name/Husband Name** : **திருவேங்கடசாமி**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.09.2022

---

**முதல் விசாரணை:**

**1.**நான் சுப்பலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2016ம் ஆண்டு ஒரு நாள் காலை சுமார் 11 மணியளவில் பிக்அப் வேனில் 10 நபர்கள் பூக்களை ஏற்றிக்கொண்டு சுப்பலாபுரத்தில் இருந்து மதுரைக்கு சென்று கொண்டிருந்த போது தொ.விலக்கு அருகே சென்றபோது நாங்கள் சென்ற வண்டியின் ராடு கட்டாகி ரோட்டில் சாய்ந்த போது எதிரே வந்த லாரி எங்கள் வண்டி மீது மோதியதில் வண்டியில் சென்ற 4 நபர்கள் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள், எனக்கு தலையில் இடதுபக்கம் காயம் ஏற்பட்டது, பின்னால் அமர்ந்திருந்த 7 பேரில் இரண்டு நபர்களுக்கு நல்ல காயம் ஏற்பட்டிருந்தது.

2. மாடசாமி என்பவர் லாரிக்கு அடியில் சக்கரத்தில் மாட்டிக்கொண்டு இருந்தார். அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள், அவர் மருத்துவமனையில் இறந்துவிட்டார். எனது செல்போன் நொறுங்கிவிட்டது. அதனால் வேறொரு நபரிடம் செல்போன் வாங்கி வீட்டிற்கு தகவல் சொன்னேன். லாரியில் ஓட்டிவந்த டிரைவரும் ஆட்களை துாக்கி உதவி செய்தார். டிரைவர் யார் என்று எனக்கு நியாபகம் இல்லை.

3. நானும் காயம்பட்டவர்களும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (அந்த புகார்வாக்குமூலம் **அசா.ஆ,1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**4.** மதுரையில் பூக்கடையில் 12 மணியில் இருந்து 1 மணிக்கு ஏலம் விடுவார்கள். நாங்கள் கொண்டு சென்ற பூக்களை நாங்களே விற்பனை செய்வோம். நாங்கள் சென்ற வண்டியில் தான் வழக்கமாக பூக்களை கொண்டு செல்வோம். எங்கள் ஊரில் இருந்து மதுரைக்கு செல்வதற்கு ஒன்றரை மணி நேரத்தில் இருந்து ஒன்னேமுக்கால் மணி நேரம் ஆகும்.

5. நாங்கள் வந்த பகுதி இறக்கமான பகுதி என்றால் ஓரளவு இறக்கமான பகுதி. எதிரி ஓட்டி வந்த வாகனம் ரோட்டின் தென்புறமாக இருந்தது என்றால் சரிதான். மாடசாமி மீது லாரி ஏறிய விபரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொன்னேனா என்றால் என்னை யாரும் விசாரிக்கவில்லை. நாங்கள் சென்ற வண்டி பூக்கடைக்கு செல்வதற்காக அதிவேகமாக சென்றதால் ராடு உடைந்து ரோட்டில் குத்தி வண்டியில் சென்றவர்கள் தூக்கி வீசப்பட்டு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

6. நாங்கள் சென்ற வண்டியில் டிரைவருக்கு மேலே கேபினில் ஆட்கள் யாரும் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை, பின்பக்க டோரில் உட்கார்ந்து பயணம் செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி அவரது தரப்பில் மெதுவாக சென்றார் என்றும் எங்கள் வண்டி ராடு கட்டானதால் நிலை தடுமாறி கவிழ்ந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

S.d./ Maharajan

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.